உ

சிவமயம்.

சேக்கிழார்நாயனார்

செய்தருளிய

# பெரியபுராணச்செய்யுட்டிரட்டு.

இஃது

ஊ. புஷ்பரதசெட்டிஅண்டுகெம்பெனியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1907.

9—500.

உ

திருச்சிற்றம்பலம்

# பெரியபுராணச்செய்யுட்டிரட்டு.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

## விநாயகர்துதி.

எடுக்குமாக்கதையின்றமிழ்ச்செய்யுளாய்
நடக்குமேன்மைநமக்கருள்செய்திடத்
தடக்கையைந்துடைத்தாழ்செவிநீண்முடிக்
கடக்களிற்றைக்கருத்துளிருத்துவாம்.

## நடேசர்துதி.

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி.

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக்கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பரவியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்ற பூங்கழல்போற்றிபோற்றி.

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் றேட
வையர்தாம் வெளியே யாடுகின் றாரை
யஞ்சலி மலர்த்திமுன் போற்றுங்
கைகளோ திளைத்த கண்களோ வந்தக்
கரணமோ கலந்தவன் புந்தச்
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
றிருக்களிற் றுப்படி மருங்கு.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
விந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
றிருநடங் கும்பிடப் பெற்று

மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடியறி வரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
யெல்லையி லின்ப வெள்ள
மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ்
சேவடி போற்றி யென்ன.

கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுட
னுருகும் பரிவின பேறெய்து
மெய்யுந் தலமிசை விழுமுன் னெழுதரு
மின்றாழ் சடையொடு நின்றாடு
மையன் றிருநட மெதிர்கும் பிடுமவ
ரார்வம் பெருகுத லளவின்றால்.

இறவாதவின்பவன்புவேண்டிப்பின்வேண்டுகின்றார் [று
பிறவாமைவேண்டுமீண்டும்பிறப்புண்டேலுன்மையென்
மறவாமைவேண்டுமின்னும்வேண்டுநான்மகிழ்ந்துபாடி
யறவாநீயாடும்போதுன்னடியின்கீழிருக்கவென்றார்.

திசைமுழுதுங்கணநாதர்தேவர்கட்குமுன்னெருங்கி
மிசைமிடைந்துவரும்பொழுதுவேற்றொலிகள்விரவாமே
யசையவெழுங்குழலொத்தஞ்செழுத்தாற்றமைப்பரவு
மிசைவிரும்புங்கூத்தனொழுந்தருளியெதிர்நின்றார்.

இன்னறருமிழிபிறவியிதுதடையென்றேதுயில்வா
ரந்நிலைமையம்பலத்துளாடுவாரறிந்தருளி
மன்னுதிருத்தொண்டரவர்வருத்தமெலாந்தீர்ப்பதற்கு
முன்னணைந்துகனவின்கண்முறுவலொடுமருள்செய்வார்

---

## மூலஸ்தானதோத்திரம்.

பேறினியிதன்மேலுண்டோபிரான்றிருக்கண்ணில்வந்த
வூறுகண்டஞ்சித்தங்கணிடந்தப்பவுதவுங்கையை [தின்
யேறுயர்த்தவர்தங்கையாற்பிடித்துக்கொண்டென்வலத்
மாறிலாய்நிற்கவென்றுமன்னுபேரருள்புரிந்தார்.

மாகமார்திருக்காளத்திமலையெழுகொழுந்தாயுள்ள
வேகநாயகரைக்கண்டாரெழுந்தபேருவகையன்பின்
வேகமானதுமேற்செல்லமிக்கதோர்விரைவினோடு
மோகமாயோடிச்சென்றார் தழுவினார் மோந்துநின்றார்.

நன்மைபெருகருணைநெறியேவந்தணைந்துநல்லூரின் [தி
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்பொழு
துன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான்.

அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே
விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே
கண்ணினாற்றிருக்கயிலையிலிருந்தநின்கோல
நண்ணிநான்றொழநயந்தருள்புரியெனப்பணிந்தார்.

கையதனா லொத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக்
கருணை கூர்ந்த, செய்யசடை வானவர்த மஞ்செழுத்து
மெழுதியசெம் பொற்றா ளங்க, ளையரவர் திருவருளா லெ
டுத்தபா டலுக்கிசைந்த வளவா லொத்த, வையமெலா
முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த வன்றே.

ஆலமேயமுதமாகவுண்டுவானவர்க்களித்துக்
காலனைமார்க்கண்டற்காக்காய்ந்தனையடியேற்கின்று
ஞாலநின்புகழேயாகவேண்டுநான்மறைகளேத்துஞ்
சீலமேயாலவாயிற்சிவபெருமானேயென்றார்.

கைகளுந்தலைமீதேறக்கண்ணிலானந்தவெள்ள [றி
மெய்யெலாம்பொழியவேதமுதல்வரைப்பணிந்துபோற்
றையனேயடியனேனையஞ்சலென்றருளவல்ல
வெய்யனேயென்றுவீடலாலவாய்விளம்பலுற்றார்.

கல்லாலேயெறிந்ததுவுமன்பானபடிகாணில்
வில்வேடர்செருப்படியுந்திருமுடியின்மேவிற்று
னல்லார்மற்றவர்செய்கையன்பாலேநயந்ததனை
யல்லாதார்கல்லெலன்பாரரனார்க்கஃதலராமால்.

நச்சியின்றமிழ்பாடியஞானசம்பந்த
ரிச்சையேபுரிந்தருளியவிறைவரின்னருளா
லச்சிறப்பருள்பூதமுன்விரைந்தகன்பீடத்
துச்சிவைத்ததுபசும்பொனாயிரக்கிழியொன்று.

அடியனேனறிவிலாமைகண்டுமென்னடிமைதேண்டிட்
படிமிசைக்கமரில்வந்திங்கமுதுசெய்பரனேபோற்றி
துடியிடைபாகமானதூயநற்சோதிபோற்றி
பொடியணிபவளமேனிப்புரிசடைப்புராணபோற்றி.

---

## சோமஸ்கந்தர்துதி.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது, மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தா, ரண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல், விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலு, மிடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம், புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றி

சைப்பு, விடமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள் கொடுத்தான்.

ஆனாயர்குழலோசைகேட்டருளியருட்கருணை
தானாயதிருவுள்ளமுடையதவவல்லியுடன்
கானாதிகாரணராங்கண்ணுதலார்விடையுகைத்து
வானாறுவந்தணைந்தார்மதிநாறுஞ்சடைதாழ.

வெள்ளிவெற்பின்மேன்மரகதக்கொடியுடன்விளங்குந்
தெள்ளுபேரொளிப்பவளவெற்பெனவிடப்பாகம்
கொள்ளுமாமலையாளுடன்கூடவீற்றிருந்த
வள்ளலாரைமுன்கண்டனர்வாக்கின்மன்னவனார்.

---

## போருத்தோத்திரம்.

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்த மணித் தூபந், தேசிற் பெருகுஞ் செழுந்தீப முதலா யினவுந் திருவமுது, மீசர்க் கேற்ற பரிசினா லருச்சித் தருள வெந் நாளும், பூசைக் சமர்ந்த பெருங்கூத்தற் பொற்பார் சிலம்பி னொலியளித்தார்.

மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி
யுறவாதிதனையுணர்ந்தொளிவிளக்குச்சுடரேற்றி
யிறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி
யறவாணர்க்கன்பென்னுமமுதமைத்தர்ச்சனைசெய்வார்.

மேவரியபெருந்தவம்யான் முன்புவிளைத்தனவென்றோ
யாவதுமோர்பொருளல்லாவென்மனத்துமன்றியே
நாவலர்காவலர்பெருகுநதிகிழியவழிநடந்த
சேவடிப்போதெப்போதுஞ்சென்னியினுமலர்ந்தனவால்.

---

## அம்மன்தோத்திரம்.

வெள்ளிமால்வரைக்கயிலையில்வீற்றிருந்தருளித்
துள்ளுவார்புனல்வேணியாரருள்செயத்தொழுது
தெள்ளுவாய்மையினாகமத்திறமெலாந்தெரிய
வுள்ளவாறுகேட்டருளினாளுலகையாளுடையாள்.

எண்ணிலாகமமியம்பியவிறைவர்தாம்விரும்பு
முண்மையாவதுபூசனையெனவுரைத்தருள
வண்ணலார்தமையருச்சனைபுரியவாதரித்தாள்
பெண்ணினல்லவளாயினபெருந்தவக்கொழுந்து.

நங்கை யுண்ணிறை காதலை நோக்கி
நாய கன்திரு வுள்ளத்து மகிழ்ந்தே
யங்க ணெய்திய முறுவலுந் தோன்ற
வடுத்த தென்கொனின் பாலென வினவ,
விங்கு நாதநீ மொழிந்தவா கமத்தி
னியல்பி னாலுனை யருச்சனை புரியப்
பொங்கு கின்றதென் னாசையென் றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினாள் போற்ற.

நெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி
நிரந்த ரந்திரு வாக்கினி னிகழ்வ
தஞ்செ ழுத்துமே யாகவா ளுடைய
வம்மை செம்மலர்க் கைகுவித் தருளித்
தஞ்ச மாகிய வருந்தவம் புரியத்
தரிப்ப ரேயவ டனிப்பெருங் கணவர்
வஞ்ச நீக்கிய மாவின்மூ லத்தில்
வந்து தோன்றினர் மலைமகள் காண.

கொய்த பன்மலர் கம்பைமா நதியிற்
குலவு மஞ்சன நிலவுமெய்ப் பூச்சு
நெய்த ருங்கொழுந் தீபதூ பங்க
ணிறைந்த சிந்தையி னீடிய வன்பின்
மெய்த ரும்படி வேண்டின வெல்லாம்
வேண்டும் போதினி லுதவமெய்ப் பூசை
யெய்த வாகம விதியெலாஞ் செய்தா
ளுயிர்கள் யாவையு மீன்றவெம் பிராட்டி.

சுரந்த ரும்பய னிதுவென வுணர்ந்து
கம்பமேவிய வும்பர்நா யகர்பா
னிரந்த காதல்செ யுள்ளத்த ளாகி
நீடு நன்மைக ளியாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாமலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பாற்

சிரம் பணிந்தெழு பூசைநா டோறுந்
திருவு ளங்கொளப் பெருகிய தன்றே.

---

### தக்ஷிணாமூர்த்திதுதி.

வேத வாரண மேற்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
வேத மானவை தீர்க்க விசைந்தன
பூத நாதனின் புண்டரீ கப்பதம்.

---

### சூரியன்துதி.

மாமறைவிதிவழாமன்மணத்துறைக்கடன்களாற்றித்
தூமறைமூதூர்க்கங்குன்மங்கலந்துவன்றியார்ப்பத்
தேமருதொடையன்மார்பன்றிருமணக்கோலங்காணக்
காமுறுமனத்தான்போலக்கதிரவனுதயஞ்செய்தான்.

---

### நந்திதேவர்துதி.

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவ ரெண்ணிலார் மற்றுங்
காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாங்
கதிர்மணிக் கோபுரத் துள்ளான்
பூதவே தாளப் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவினின் றாடு
நாதனா ராதி தேவனார் கோயி
னாயக னந்தியெம் பெருமான்.

நெற்றியிற் கண்ண ர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனிய ரநேகர்
பெற்றமேற் கொண்ட தம்பிரா னடியார்
பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியு
மலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங்
கற்றைவார் சடையா னருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்துதி.

வேதநெறிதழைத்தோங்கமிகுசைவத்துறைவிளங்கப்
பூதபரம்பரைபொலியப்புனிதவாய்மலர்ந்தழுத
சீதவளவயற்புகலித்திருஞானசம்பந்தர்
பாதமலர்தலைக்கொண்டுதிருத்தொண்டுபரவுவாம்.

சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம்
பவமதனையறமாற்றும்பாங்கினிலோங்கியஞான
முவமையிலாக்கலைஞானமுணர்வரியமெய்ஞ்ஞானந்
தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்.

## திருநாவுக்கரசுநாயனார் துதி.

திருநாவுக்கரசுவளர்திருத்தொண்டினெறிவாழ
வருஞானத்தவமுனிவர்வாகீசர்வாய்மைதிகழ்
பெருநாமச்சீர்பரவலுறுகின்றேன்பேருலகில்
ஒருநாவுக்குரைசெய்யவொண்ணுமையுணராதேன்.

## சுந்தரமூர்த்திநாயனார்துதி.

நாட்டா ரறிய முன்னாளி
னன்னா ளிறந்த வைம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப்
புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரைநீர் மடுவின்கட்
டனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழலே நினைவாரை
மீளா வழியின் மீட்டனவே.

தீதுகொள் வினைக்கு வாரோஞ்
செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசுங்
கதிர்நில விருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க
மனையிடை யிருகாற் செல்லத்
தூதுகொள் பவரா நம்மைத்
தொழும்புகொண் டுரிமைகொள்வார்.

---

## சண்டேசர்துதி.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக்
கதிப னாக்கி யனைத்துநா
முண்ட கலமு முடுப்பனவுஞ்
சூடு வனவு முனக்காகச்

சண்டீ சனுமாம் பதந்தந்தோ
 மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
 மாலை வாங்கிச் சூட்டினார்.

---

## மகேஸ்வரபூசை தோத்திரம்.

கொண்டு வந்து மனைப் புகுந்து
 குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை
 வைத் தருச்சனை செய்தபி
னுண்டி நாலு வித்தி லாறு
 சுவைத் திறத்தினி லொப்பிலா
வண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி
 லமுது செய்ய வளித்துளார்.

அல்லார் கண்டத் தண்டர்பிரா
 னருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
 பரம னடியா ரானார்க
ளெல்லா மெய்தி யுண்கவென
 விரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
 துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.

மண்ணினிற்பிறந்தார்பெறும்பயன்மதிசூடு
மண்ணலாரடியார் தமையமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர்நல்விழாப்பொலிவுகண்டார்த
லுண்மையாமெனினுலகர் முன்வருகெனவுரைப்பார்.

தனிவெள் விடைமே னெடுவிசும்பிற்
றலைவர் பூத கணநாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கண்
முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
வினிய கறியுந் திருவமுது
மமைத்தார் காண வெழுந்தருளிப்
பணிவெண் டிங்கண் முடிதுளங்கப்
பரந்த கருணை நோக்களித்தார்.

தேடியமாடுநீடுசெல்வமுந்தில்லைமன்றுள்
ஆடியபெருமானன்பர்க்காவனவாகுமென்று
நாடியமனத்தினோடுநாயன்மாரணைந்தபோது
கூடியமகிழ்ச்சிபொங்கக்குறைவறக்கொடுத்துவந்தார்.

திருச்சிற்றம்பலம்.